සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved] 14713 

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

භූගෝල විද්‍යාව II
புவியியல் II
**Geography II**

22 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

* ஒவ்வொரு பகுதியிலுமிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

* தென், தென் கிழக்கு மற்றும் கிழக்கு ஆசியாவின் படம் **ஒன்று**
* மாவட்ட எல்லைகளைக் காட்டும் இலங்கைப் படம் **மூன்று**

ஆகியன வழங்கப்படும்.

## பகுதி I - பௌதிகப் புவியியல்

1. (i) ஈரக் காலநிலைச் சூழலில் மண் உருவாக்கத்தின் பல்வேறு நிலைகளைச் சுருக்கமாக விவரிக்குக. *(04 புள்ளிகள்)*

 (ii) மண்ணின் **நான்கு** பௌதிக இயல்புகளைப் பெயரிட்டு, நீர் தெரிவு செய்த பௌதிக இயல்புகளுள் **ஒன்றின்** முனைப்பான அம்சங்கள் **இரண்டினை** விளக்குக. *(04 புள்ளிகள்)*

 (iii) மண் அரித்தலுக்கும், மண் தரம் குறைதலுக்கும் இடையிலான வேறுபாட்டினை உதாரணங்களுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

 (iv) தரப்பட்டுள்ள இலங்கைப் **படம் இல. 1** இல், செங்கபில மண் (Reddish Brown Earth - RBE) பரம்பிக் காணப்படும் **இரண்டு** மாவட்டங்களைக் குறித்துப் பெயரிட்டு, பின்வரும் தலைப்புக்களின் கீழ் செங்கபில மண்ணினை விவரிக்குக.

 (அ) முனைப்பான அம்சங்கள்

 (ஆ) இந்த மண் பிரிவுடன் தொடர்புபட்ட மானிட நடவடிக்கைகள் *(06 புள்ளிகள்)*

2. (i) "காலநிலை மாற்றம்" என்பது எதனைக் கருதுகின்றது என்பதை விளக்குக. *(03 புள்ளிகள்)*

 (ii) காலநிலை மூலகங்கள் **நான்கினைப்** பெயரிட்டு, காலநிலை மாற்றத்தினை அடையாளம் செய்வதற்கு அக்காலநிலை மூலகங்களுள் ஏதாவது **ஒன்றினை** எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதனை உதாரணங்களுடன் ஆராய்க. *(06 புள்ளிகள்)*

 (iii) கெப்பனின் பாகுபாட்டின்படி அயன மழைக் காலநிலைகளின் முனைப்பான **நான்கு** அம்சங்களினைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

 (iv) அட்டவணை 1 இனை அடிப்படையாகக் கொண்டு, மழைவீழ்ச்சிப் பருவத்தினை அடையாளம் செய்து, அப்பருவத்துடன் இணைந்து காணப்படும் இலங்கையின் மழைவீழ்ச்சியின் இடஞ்சார்ந்த பரம்பல் பாங்கின் **இரண்டு** அம்சங்களை ஆராய்க.

 **அட்டவணை** 1 : 1990 இல் நான்கு மாத காலப்பகுதியில், தெரிவு செய்யப்பட்ட நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட மழைவீழ்ச்சி

| நிலையம் | கொழும்பு | இரத்தினபுரி | அம்பாறை | குருநாகல் | வட்டவளை | மன்னார் | பதுளை | அம்பாந்தோட்டை | அநுராதபுரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மழைவீழ்ச்சி (mm) | 3500 | 4000 | 2000 | 2500 | 4500 | 850 | 2500 | 1100 | 1250 |

*(05 புள்ளிகள்)*

3. (i) உலகின் இயற்கை அனர்த்தங்கள் **நான்கினைப்** பெயரிடுக. *(01 புள்ளி)*

 (ii) மனித சூழலில் இயற்கை அனர்த்தங்களின் மிக மோசமான பாதிப்புக்கள் **ஐந்தினை** உதாரணங்கள் தந்து ஆராய்க. *(10 புள்ளிகள்)*

 (iii) **மூன்று** வகையான இயற்கை அனர்த்தங்களுடன் தொடர்பான தாக்கங்களை இழிவளவாக்குவதற்கு இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள **மூன்று** தணிப்பு முறைகளை, குறிப்பான உதாரணங்களுடன் விவரிக்குக. *(09 புள்ளிகள்)*

4. (i) ஈரநிலச் சூழல் தொகுதியொன்றினை வரையறை செய்க. *(01 புள்ளி)*

 (ii) சூழல் தொகுதிகளின் பேணுகைக்கு ஈரநிலங்கள் எவ்வாறு பங்களிக்கின்றதென்பதை **நான்கு** உதாரணங்கள் தந்து விளக்குக. *(04 புள்ளிகள்)*

 (iii) (அ) இலங்கைப் **படம் இல. 4** இல், 1 தொடக்கம் 6 வரை காட்டப்படும் ஈரநிலப் பகுதிகளை அடையாளம் செய்து பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

 (ஆ) இலங்கையில் ஈரநில வளங்களின் பொருளாதார அனுகூலங்கள் **மூன்றினை** ஆராய்க. *(06 புள்ளிகள்)*

 (iv) இலங்கையில் ஈரநிலங்களுக்கு அச்சுறுத்தலாகக் காணப்படும் **மூன்று** மானிட நடவடிக்கைகளை உதாரணங்களுடன் ஆராய்க. *(06 புள்ளிகள்)*

[பக். 02 ஐப் பார்க்க

8 (B) (i) தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் என்பதனால் விளங்கிக் கொள்ளப்படுவது யாது ? (02 புள்ளிகள்)

(ii) தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தின் பயன்பாடானது விருத்தி பெற்ற மற்றும் விருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் பூகோள ரீதியில் சமூக - பொருளாதார சமனற்ற தன்மைகளின் அதிகரிப்புக்கு இட்டுச் செல்கின்றதா எனப் பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)

(iii) தகவல் தொடர்பாடல் தொழினுட்பமானது, காலம் மற்றும் இடஞ்சார்ந்த உலகமயமாக்கல் செயன்முறையில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் குறிப்பான உதாரணங்கள் தந்து ஆராய்க.

(அ) பொருளாதார உலகமயமாக்கம்

(ஆ) கலாச்சார உலகமயமாக்கம் (08 புள்ளிகள்)

(iv) இலங்கைப் பொருளாதாரத்தின் உடன்பாடான உருமாற்றத்தினை நோக்கிய தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் பயன்பாட்டின் செல்வாக்கானது, மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுகின்றது என்ற கருத்துடன் நீர் உடன்படுகின்றீரா ? காரணங்கள் தந்து ஆராய்க. (06 புள்ளிகள்)

* * *

The National e-learning Portal for The General Education

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2012**

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

| | | |
|---|---|---|
| භූගෝල විද්‍යාව II | I කොටස | (භෞතික භූගෝල විද්‍යාව) |
| புவியியல் II | பகுதி I | (பௌதிகப் புவியியல்) |
| **Geography II** | **Part I** | **(Physical Geography)** |

22 | II

විභාග අංකය
சுட்டெண்
**Index No.** ........................

ප්‍රශ්න අංකය
வினா இல
**Question No.** 1



ප්‍රශ්න අංකය
வினா இல
**Question No.** 4



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

| | | |
|---|---|---|
| භූගෝල විද්‍යාව II<br>புவியியல் II<br>Geography II | II කොටස (මානුෂ භූගෝල විද්‍යාව)<br>பகுதி II (மானிடப் புவியியல்)<br>Part II (Human Geography) | 22 II |

ප්‍රශ්න අංකය / வினா இல / Question No. 6

විභාග අංකය / சுட்டெண் / Index No. ......................




මෙතැනින් වෙන් කරන්න. / இங்கே வெட்டுக. அகற்றவும் / detach here

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

භූගෝල විද්‍යාව II
புவியியல் II
Geography II


II කොටස (මානුෂ භූගෝල විද්‍යාව)
பகுதி II (மானிடப் புவியியல்)
Part II (Human Geography)

22 II

14731

ප්‍රශ්න අංකය
வினா இல
Question No. 7

විභාග අංකය
சுட்டெண்
Index No. ........................




මෙතැනින් වෙන් කරන්න. / இங்கே வெட்டி அகற்றவும் / detach here

16634

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved 

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ※ ***எல்லா*** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது ***சுட்டெண்ணை எழுதுக.***
- ※ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றுக.
- ※ **1 தொடக்கம் 50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் ***சரியான*** விடையைத் தெரிந்தெடுத்து, ***தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய*** விடைத்தாளில் ***அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் புள்ளடி*** (X) இடுக.
- ※ ஒரு விடைக்கு **02** புள்ளிகள். 50 வினாக்களுக்கும் **100** புள்ளிகள்.

● **1 – 15** வரலயிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் நான்கு சரியானவையாகும். சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.

**1.** அரசியல் விஞ்ஞானம் என்பது

A – அரசியலின் கோட்பாட்டுப் பகுதியைக் கற்கும் பாடத்தைக் குறிக்கும் விஞ்ஞான நாமமாகும்.
B – பிரதானமாக இன்றைய மற்றும் நாளைய தினத்தின் பயன்பாட்டுக்காக இறந்தகால அரசியல் பிரச்சினைகளைக் கற்பதில் கவனம் செலுத்துகின்றது.
C – சமூக விஞ்ஞானங்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பாடமாகும்.
D – மனிதர்களைப் பூவுலக வாழ்க்கையிலிருந்து மீட்டெடுக்க முயல்கின்றது.
E – சமூக விஞ்ஞானங்களுள் தலையாய விஞ்ஞானமாகக் கருதப்படுகிறது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**2.** அரசியல் என்பது

A – அதிகார அரசியலின் நடைமுறைப் பகுதியாகும்.
B – அதிகாரத்தைக் கைப்பற்றுவதையும் தக்கவைப்பதையும் பரவலாக்குவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.
C – அரசியல் கட்சிகளாலும் அரசியல்வாதிகளாலும் மேற்கொள்ளப்படும் ஒரு விளையாட்டாகும்.
D – மோதும் நலன்கள், அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள் என்பவற்றின் இறுதிப் பெறுபேறாகும்.
E – ஒழுக்க மற்றும் சமய விழுமியங்களினால் கடுமையாகக் கட்டுப்படுத்தப்படுகிறது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**3.** அரசு என்பது

A – மனிதர்களால் தாபிக்கப்பட்டுள்ள பல்வேறு சங்கங்களுள் ஒன்று மட்டுமாகும்.
B – மானசீகமான ஒன்றாகும்.
C – ஸ்பரிசிக்க முடியாததும் புலனாகாததுமாகும்.
D – நிரந்தரமான ஒன்றாகும்.
E – முழுமையான ஒன்றாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**4.** அரசாங்கம் என்பது

A – சமூகத்தின் ‘பொதுச் சித்தத்தினைப்’ பிரதிநிதித்துவப்படுத்தும் முகவர் என்று கருதப்படுகின்றது.
B – சட்ட, நிறைவேற்று, நீதி ஆகிய முத்துறைகளையும் உள்ளடக்கியதாகும்.
C – ஸ்பரிசிக்கக்கூடியதும் புலனீடானதுமாகும்.
D – அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் மரபுரிமையாளராகும்.
E – நிரந்தரமற்றதும் காலரீதியான மாற்றத்துக்குட்படுவதுமாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**5.** சட்டத்துறை என்பது

A – தனிமன்ற முறை இருமன்ற முறை என இருவகைப்படும்.
B – அரசாங்கத்தின் முத்துறைகளுள் பாரிய தாபனமாகும்.
C – அரசியல் முறைமையில் சட்டமுறையான சட்டவாக்குனர் என்று ஏற்கப்படுகின்றது.
D – அரச நிதியின் பொறுப்பாளராகும்.
E – அரசாங்கத்தின் நிறைவேற்று, நீதித் துறைகளை விடக் கீழானதாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 2 ஐப் பார்க்க

6. நிறைவேற்றுத்துறை என்பது
A – அரசாங்கத்தின் திட்டங்களையும் சட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் நிறுவனமாகும்.
B – அரசியல் மற்றும் நிரந்தர நிர்வாகம் என்ற இரு பகுதிகளைக் கொண்டதாகும்.
C – தனது பணிகளை பொலிஸ் மற்றும் அரசாங்க சேவையினூடாக நிறைவேற்றுகின்றது.
D – தனது மனச்சாட்சிக்கன்றி வேறு எவருக்கும் பொறுப்புக் கூறுவதில்லை.
E – அனைத்தாண்மைமுறை, ஜனாதிபதிமுறை, பாராளுமன்றமுறை என மூவகையினதாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

7. நீதித்துறை என்பது
A – நீதித் தீர்மானங்களை எடுப்பதற்கு உத்தியோக ரீதியாக அதிகாரம் வழங்கப்பட்ட அரசாங்கத்தின் மூன்றாவது துறையாகும்.
B – சுதந்திரமானதாகவும் பக்கச்சார்பற்றதாகவும் தைரியமுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
C – நிறைவேற்றுத் துறையின் விருப்புகளுக்கேற்பச் செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
D – நீதியினதும் நேர்மையினதும் உயர் பாதுகாவலன் எனக் கருதப்படுகின்றது.
E – பிரதம நீதியரசரின் தலைமையின் கீழமைந்த மேல்நிலை, கீழ்நிலை என்ற நீதிமன்றப் படிநிலையமைப்பினைக் கொண்டதாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

8. மந்திரிசபை அரசாங்க முறை என்பது
A – பன்முகச் சமூக முறைக்கு அதிகம் பொருந்தும்.
B – நாம நிர்வாகம், உண்மை நிர்வாகம் ஆகிய இரண்டினைக் கொண்டதாகும்.
C – அரசியல் கட்சி அரசாங்கம் என்றும் அழைக்கப்படுகின்றது.
D – ஜனநாயகத் தன்மை வாய்ந்ததும் பொறுப்புடைமை மிக்கதுமாயினும் செயற்றிறன் குன்றியதாகும்.
E – கட்சிகளினடிப்படையில் செயற்படுவதால் அரசியல் ரீதியாக உறுதியற்றதாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

9. ஜனாதிபதி அரசாங்க முறை என்பது
A – ஜனாதிபதி என்றழைக்கப்படும் தனித்த நிர்வாகம் என்ற பண்பினையுடையதாகும்.
B – ஜனநாயகத் தன்மை குறைந்ததாயினும் செயற்றிறன் மிக்கதாகும்.
C – பலமான நிறைவேற்றுத் துறையின் காரணமாக அரசியல் ரீதியாக உறுதிமிக்கதாகும்.
D – பல கட்சி முறை நிலவும் நாடுகளுக்கு அதிகம் பொருந்தும்.
E – அனைத்தாண்மை அரசாங்க முறை என்று கருதப்படுகின்றது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

10. ஒற்றையாட்சி முறையின் பிரதான பண்புகளாவன
A – ஒரு தனி மத்திய அரசாங்கத்தில் இறைமை அதிகாரம் செறிந்திருத்தல்
B – இரட்டைக் குடியுரிமை
C – ஒற்றை நிர்வாக மற்றும் நீதி முறைமை
D – தனித்த அரசியலமைப்பு
E – மத்திய அரசினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்கள்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

11. சமஷ்டி முறையின் அடிப்படைகளாவன
A – பலவீனமான மத்திய அரசாங்கம் மற்றும் பலமான சமஷ்டி அலகுகள்
B – அதிகாரப் பங்கீடு
C – எழுதப்பட்ட, நெகிழா யாப்பு
D – அரசியலமைப்பின் பாதுகாவலனாகச் செயற்படும் சுதந்திரமான நீதித் துறை
E – சமஷ்டி அலகுகளுக்குச் சமமான கவனிப்பு
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

12. முதலாளித்துவ அரசாங்கத்தின் பிரதான பண்புகளாவன
A – தனியார் சொத்துடைமையை அங்கீகரித்தல்
B – சுதந்திரமான முயற்சியை அங்கீகரித்தல்
C – திறந்த சந்தை முறையினை அங்கீகரித்தல்
D – பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் குறைந்தபட்சத் தலையீடு
E – அரசாங்கம் எதனையும் செய்யாது தனியார் துறையே சகலதையும் செய்ய வேண்டும் என்ற கோட்பாட்டை அங்கீகரித்தல்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 3 ஐப் பார்க்க

**13.** சமதர்ம அரசாங்க முறையின் பிரதான பண்புகளாவன

A – ஒரு கட்சி ஆதிக்க அரசியல் முறைமை

B – தனியார் சொத்துடைமை நிலவாமை

C – உற்பத்தி, பங்கீடு, பரிமாற்றம் என்பவற்றின் மீது அரசத் தனியுரிமை

D – அரசியல் சுதந்திரத்தை அர்பணிப்பதனடிப்படையிலமைந்த பொருளாதாரச் சமத்துவம்

E – ஜனநாயக மூலக்கொள்கைகளின் அடிப்படையிலமைந்த அரசாங்கக் கட்டமைப்புக்கள்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**14.** அனைத்தாண்மை அரசாங்கத்தின் பிரதான பண்புகளாவன

A – சுயமாக நியமிக்கப்பட்ட ஆட்சியாளர்

B – சட்டத்துக்குக் கீழ்படியாத தன்னிகரற்ற ஆட்சி

C – ஆட்சியாளர் பொறுப்புக் கூறாமை

D – நிச்சயமான பொருளாதார, அரசியல் கருத்தியல்களினடிப்படையிலமைந்த ஆட்சி

E – ஆளப்படுவோர் மீது அரச அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு வன்முறையினைப் பிரயோகித்தல்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**15.** ஜனநாயக அரசாங்க முறையின் பிரதான பண்புகளாவன

A – யாப்புறு அரசாங்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சி

B – மக்கள் இறைமை மற்றும் ஆட்சியாளர்கள் மக்களுக்குப் பொறுப்புக்கூறல்

C – நீதித் துறையின் சுதந்திரம்

D – போட்டிக் கட்சிமுறை மற்றும் ஊடகச் சுதந்திரம்

E – "சகலரும் சமமானவர்கள்; ஆனால் சிலர் ஏனையோரைவிட அதிகம் சமமானவர்கள்" என்ற சித்தாந்தை அங்கீகரித்தல்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

● **16 – 20** வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் ஒன்று பிழையானதாகும். **பிழையான கூற்றைத்** தெரிவு செய்க.

**16.** பிரித்தானிய அரசியல் முறையின் முக்கிய பண்புகளாவன

(1) எழுதப்படாத அரசியல் திட்டம்

(2) தனிமுதன்மையான முடியாட்சி

(3) சட்டத்தின் ஆட்சி

(4) பாராளுமன்ற இறைமை

(5) மரபுகள்

**17.** அமெரிக்க அரசியல் முறைமையின் அடிப்படை மூலக்கொள்கைகளாவன

(1) அரசியல் திட்டத்தின் மூலமே அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டதனை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டி அரசாங்கம்

(2) நான்கு வருட காலத்துக்கு மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் நிறைவேற்று ஜனாதிபதி

(3) தடைகள் சமன்பாடுகள் முறைமையோடு இணைந்த அதிகாரப் பிரிவினையின் அடிப்படையிலமைந்த மத்திய அரசாங்கம்

(4) இரு மன்றங்களைக் கொண்ட காங்கிரஸ் என்ற பெயரால் அழைக்கப்படும் சட்டமன்றம்

(5) நீதிப் புனராய்வு அதிகாரத்தைக் கொண்ட சுதந்திரமான நீதித்துறை

**18.** சுவிஸ்சர்லாந்து சமஷ்டி அரசாங்கத்தின் நிறைவேற்றுத் துறை

(1) சமஷ்டிப் பேரவை என்றழைக்கப்படுகின்றது.

(2) ஏழு உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

(3) சமஷ்டி மன்றினால் தெரிவு செய்யப்படுகின்றது.

(4) ஏழு உறுப்பினர்களுள் ஒருவர் தலைமைத்துவத்தினை வகிப்பதுடன் அவர் ஜனாதிபதி என்றழைக்கப்படுகின்றார்.

(5) சமஷ்டி மன்றின் பெரும்பான்மைக் கட்சி உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்படுகின்றது.

**19.** பிரான்சின் தற்போதைய அரசாங்க முறைமை

(1) டி கோல் அரசியலமைப்பின் கீழ் 1958 இல் தாபிக்கப்பட்டது.

(2) ஐந்தாம் குடியரசு என்றழைக்கப்படுகின்றது.

(3) கலப்பு ஜனாதிபதி முறை என்றழைக்கப்படுகின்றது.

(4) உண்மை நிர்வாகியான ஜனாதிபதியினால் தலைமை தாங்கப்படுகின்றது.

(5) சமபலம் மிக்க நிறைவேற்று மற்றும் சட்டத் துறைகள் என்ற மூலக்கொள்கையினடிப்படையில் தாபிக்கப்பட்டுள்ளது.

[பக். 4 ஐப் பார்க்க

20. இந்திய அரசாங்கமானது
(1) அரைகுறை சமஷ்டி முறையினதாகும்.
(2) 1950 இல் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்டது.
(3) மத்திய அரசாங்கத்தையும் 28 மாநில அரசாங்கங்களையும் கொண்டதாகும்.
(4) உண்மை நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதியினால் தலைமை தாங்கப்படுகின்றது.
(5) மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையிலான அதிகாரப் பங்கீட்டு முறையின் அடிப்படையில் செயற்படுகின்றது.

● **21 – 25** வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் ஒன்று மட்டும் சரியானதாகும். சரியான கூற்றைத் தெரிவு செய்க.

21. சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளர்கள்
(1) அரச சார்பு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களாகும்.
(2) ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சீனா, இரஷ்ய சமஷ்டி போன்ற பெரிய அரசுகளாகும்.
(3) உலக வங்கி, சர்வதேச நாணய நிதி, ஐரோப்பிய ஒன்றியம்
(4) பல்தேசக் கம்பனிகள், ஐக்கிய நாடுகள் தாபனம், அரச சார்பற்ற நிறுவனங்கள்
(5) இறைமை மிக்க தேசிய அரசுகள், சர்வதேச நிறுவனங்கள், பல்தேசக் கம்பனிகள், சர்வதேச மட்டத்தில் மிக முக்கிய நபர்கள்

22. பொதுத் துறைக் கொள்கை என்பது
(1) மக்களின் பொது நன்மைகளுக்காக அரசினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளாகும்.
(2) அரசியல் கட்சிகளின் கொள்கைகளாகும்.
(3) தனியார் துறை முயற்சிகளின் கொள்கைகளாகும்.
(4) அரச சார்பற்ற நிறுவனங்களின் கொள்கைகளாகும்.
(5) அரசாங்கத்தின் தனிப்பட்ட அமைச்சர்களின் கொள்கைகளாகும்.

23. 'மோதல் முக்கோணம்' பற்றிய கோட்பாட்டை முன்வைத்தவர்
(1) எட்வட் ஈ அசார்
(2) மைக்கல் ஈ பிரவுன்
(3) சாமுவெல் பீ ஹன்ரிங்ரன்
(4) ஜொஹான் கல்தூங்
(5) கால் மாக்ஸ்

24. இறைமை அதிகாரம் என்பது
(1) அரசின் அதிகாரமாகும்.
(2) மக்களின் அதிகாரமாகும்.
(3) கடவுளின் அதிகாரமாகும்.
(4) அரசாங்கத்தின் அதிகாரமாகும்.
(5) சிவில் சமூகத்தின் அதிகாரமாகும்.

25. அதிகார வேறாக்கம் பயன்படுவது
(1) நிறைவேற்றுத் துறையின் அதிகாரத்தினைக் கட்டுப்படுத்துவதற்காகும்.
(2) சட்டத்துறையின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகும்.
(3) நீதித்துறையின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகும்.
(4) அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகும்.
(5) சிவில் சேவையினதும் பொலிசினதும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகும்.

● **26 – 40** வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் நான்கு சரியானவையாகும். சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.

26. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் ஏற்படுத்தப்பட்ட சில சமூக-பொருளாதார, அரசியல் மாற்றங்களாவன
A – தனிமுதன்மை முடியாட்சி ஒழிக்கப்பட்டமை
B – மானிய முறை ஒழிக்கப்பட்டமை
C – சாதி முறைமை ஒழிக்கப்பட்டமை
D – வர்த்தகப் பயிர்ச்செய்கை முறை அறிமுகம் செய்யப்பட்டமை
E – மேற்கத்திய கல்வி முறைமை அறிமுகம் செய்யப்பட்டமை
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

27. 1832 கோல்புரூக் சீர்திருத்தங்களினால் சிபாரசு செய்யப்பட்டவையாவன
A – இரட்டை நிர்வாக முறைமையின் ஒழிப்பு
B – பிரித்தானியக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் வர்த்தகத் தனியுரிமையின் ஒழிப்பு
C – தேசாதிபதியின் அதிகாரக் குறைப்பு
D – தேசாதிபதிக்கு உதவுவதற்கு சட்ட நிருபண, சட்ட நிர்வாக சபைகளின் தாபிப்பு
E – சட்டமன்றின் ஓர் உறுப்பினரைத் தேர்தல் மூலம் தெரிவு செய்தல்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 5 ஐப் பார்க்க

28. நீதித் துறையினைச் சீர்திருத்துவதற்காக 1832 இல் கமரூன் முன்வைத்த பிரதான சிபார்சுகளாவன

A – நீதி நிர்வாகத்தின் மீதான தேசாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கக் கூடாது.

B – உயர் நீதிமன்றின் நியாயாதிக்கம் முழு நாட்டுக்கும் பரவலாக்கப்பட வேண்டும்.

C – ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒன்று என்ற வகையில் சகல மாவட்டங்களிலும் மாவட்ட நீதிமன்றங்கள் தாபிக்கப்பட வேண்டும்.

D – மாவட்ட நீதிமன்றங்களுக்குப் பூரண குடியியல் நீதி அதிகாரமும் வரையறுக்கப்பட்ட குற்றவியல் நீதி அதிகாரமும் வழங்கப்பட வேண்டும்.

E – ஐரோப்பியர் தொடர்பாக உயர் நீதிமன்றம் பெற்றிருந்த புறம்பான குடியியல் நியாயாதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

29. 1910 - 1924 காலப்பகுதியில் இடம்பெற்ற அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மூலம்

A – சட்டமன்றின் பிரதிநிதித்துவத் தளம் பரவலாக்கப்பட்டது.

B – சட்டமன்றின் உத்தியோகத்தரல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட்டது.

C – பிரதேசவாரியாகத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட்டது.

D – சட்டமன்றின் உத்தியோகத்தரல்லாத உறுப்பினர்களின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டது.

E – சட்டமன்றின் இனவாரிப் பிரதிநிதித்துவம் முழுமையாக ஒழிக்கப்பட்டது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

30. இலங்கைத் தேசிய காங்கிரஸ்

A – 1919 இல் தாபிக்கப்பட்டது.

B – இன மற்றும் பிரதேசக் குழுக்கள் சிலவற்றின் ஒன்றிணைப்பாகும்.

C – உள்ளகப் பிளவுகளின் காரணமாக ஒரு பலமான அமைப்பாக இருக்கவில்லை.

D – சகல பொருளாதார, சமூகப் படித்தரங்கள் அடங்கிய ஒரு மகாஜன இயக்கமாகும்.

E – ஆங்கிலம் கற்ற செல்வந்த மத்தியதர வர்க்கத்தினரால் தலைமை தாங்கப்பட்ட ஓர் இயக்கமாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

31. லங்கா சமசாஜக் கட்சி

A – 1935 இல் தாபிக்கப்பட்டது.

B – இலங்கையில் தாபிக்கப்பட்ட முதலாவது இடதுசாரிக் கட்சியாகும்.

C – மாக்சீயத்தைத் தழுவிய, மேற்கத்திய கல்வியைப் பெற்ற, இளம் தீவிரவாதக் குழுவினால் தாபிக்கப்பட்டது.

D – ஆரம்பத்தில் அது ஒரு காடர் கட்சியாக ஒழுங்கமைக்கப்பட்டது.

E – இலங்கையில் ஒரு சமதர்ம அரசாங்கத்தை உருவாக்கும் நோக்கினைக் கொண்டிருந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

32. 1931 டொனமூர் சீர்திருத்தங்கள் மூலம் முன்மொழியப்பட்டவை

A – நிறைவேற்று மற்றும் சட்டவாக்கப் பணிகள் ஒப்படைக்கப்பட்ட ஓர் அரசாங்க சபை தாபிக்கப்பட வேண்டும்.

B – சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட வேண்டும்.

C – ஏழு நிறைவேற்றுக் குழுக்களினதும் தலைவர்களைக் கொண்ட ஒரு மந்திரிமார் சபை நிறுவப்பட வேண்டும்.

D – மூன்று அரச அதிகாரிகளும் சபாநாயகரும் நீங்கலாக ஏனைய அரசாங்க சபை உறுப்பினர்களை உள்ளடக்கி ஏழு நிறைவேற்றுக் குழுக்கள் தாபிக்கப்பட வேண்டும்.

E – பொதுத்துறை நிர்வாகம், நிதி, நீதி ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான மூன்று அரச அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

33. டொனமூர் அரசாங்கம்

A – பொறுப்பரசாங்க முறையை இலங்கைக்குக் கோரி நிற்பதற்கு இலங்கையரைத் தயார்படுத்தியது.

B – அரசியல்வாதிகளுக்கு நிர்வாகம் பற்றிய பயிற்சியை வழங்கியது.

C – ஜனநாயக ஆட்சியைப் பலவீனப்படுத்துவதற்குப் பாரியளவில் பங்காற்றியது.

D – பொறுப்பரசாங்கத்தைப் பெற்றுக்கொள்ளும் போராட்டத்துக்கான மேடையை வழங்கியது.

E – பிரதிநிதித்துவ அரசாங்கத்துக்கும் பொறுப்பரசாங்கத்துக்குமிடையிலான பலத்த இடைவெளியை அகற்றியது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 6 ஐப் பார்க்க

34. 1948 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்
A – பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட இறுதி அரசியலமைப்புச் சீர்திருத்தங்களாகும்.
B – பிரித்தானிய பொதுநலவாயத்தின் உறுப்புரிமையுடன் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தினை வழங்கின.
C – பிரித்தானிய பாராளுமன்ற முறையினை மாதிரியாகக் கொண்ட மந்திரிசபை அரசாங்க முறையினை அறிமுகம் செய்தன.
D – பிரித்தானிய மகா இராணியாரை இலங்கையரசின் தலைவராகக் கொண்டதன் மூலம் காலனித்துவத் தொடர்பினைத் தொடர்ந்தும் பேணின.
E – இலங்கை தொடர்பாகச் சட்டவாக்கம் செய்வதற்கு பிரித்தானியப் பாராளுமன்றம் பெற்றிருந்த அதிகாரம் ஒழிக்கப்பட்டது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

35. சோல்பரி அரசியலமைப்பின் கீழமைந்த மந்திரிசபை
A – கீழ்மன்றின் உறுப்பினர்களிலிருந்து மகாதேசாதிபதியினால் நியமிக்கப்பட்டது.
B – பிரதம மந்திரியினால் தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையினரைக் கொண்டிருந்தது.
C – பாராளுமன்றுக்குக் கூட்டாகப் பொறுப்புக் கூற வேண்டியிருந்தது.
D – பிரித்தானியப் பாராளுமன்ற மரபுகளைப் பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.
E – அரசாங்கத்தின் உண்மையான நிறைவேற்று அதிகாரத்தைப் பெற்றிருந்தது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

36. 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ்
A – நாட்டின் உத்தியோகப்பூர்வப் பெயரான இலங்கை ஸ்ரீ லங்கா என்று மாற்றப்பட்டது.
B – இலங்கை சுதந்திரமும், இறைமையும் பொருந்திய ஒரு குடியரசாக ஆக்கப்பட்டது.
C – அரசியலமைப்பு நாட்டின் அடிப்படைச் சட்டமாக ஆக்கப்பட்டது.
D – இலங்கைக் குடியரசின் இறைமை மக்களிடத்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டது.
E – மக்கள் இறைமை மக்களினால் தேர்தல்களின் மூலம் பிரயோகிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டது.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

37. 1972 அரசியலமைப்பினை வகுக்கும்போது பயன்படுத்தப்பட்ட அரசியல் கோட்பாடுகளாவன
A – வலுவேறாக்கக் கோட்பாடு
B – பாராளுமன்ற இறைமைக் கோட்பாடு
C – ஜனநாயக சோசலிசக் கோட்பாடு
D – மக்கள் இறைமைக் கோட்பாடு
E – கூட்டுப்பொறுப்புக் கோட்பாடு
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

38. 1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட சில புதிய அரசியல் நிறுவனங்களாவன
A – நிறைவேற்று ஜனாதிபதி முறைமை
B – இரட்டை நிறைவேற்று முறைமை
C – ஒம்புட்சுமன்
D – மாகாண சபை முறைமை
E – நீதி சேவை ஆணைக்குழு
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

39. 1978 அரசியலமைப்பின் படி இலங்கைக் குடியரசின் இறைமை மக்களிடத்துள்ளதாக இருப்பதுடன் மக்கள் தமது இறைமையைப் பிரயோகிக்கும் வழிமுறைகளாவன
A – சட்டவாக்கத் தத்துவம் பாராளுமன்றின் மூலமும் மக்கள் தீர்ப்பின்போது மக்கள் மூலமும்
B – நிறைவேற்றுத் தத்துவம் மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியின் மூலம்
C – நீதிமுறைத் தத்துவம் நீதிமன்றங்கள், ஏனைய நீதி நிறுவனங்கள் ஊடாகப் பாராளுமன்றின் மூலம்
D – அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதன் மூலம்
E – 18 வயதைப் பூர்த்தி செய்துள்ள சக ஆட்களினால் வாக்குரிமையின் மூலம்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

40. 1978 அரசியலமைப்பின் கீழமைந்த உயர் நீதிமன்றம்
A – அங்ககச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளது.
B – பிரதம நீதியரசரையும் 6 - 10 வரையிலான ஏனைய நீதியரசர்களையும் கொண்டமைந்துள்ளது.
C – குடியியல் மற்றும் குற்றவியல் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பெற்ற இறுதி நீதிமன்றமாகும்.
D – அடிப்படையுரிமைகள் மற்றும் அரசியலமைப்பு விவரணம் தொடர்பாகத் தனியானதும் பிரத்தியேகமானதுமான அதிகாரத்தைப் பெற்றுள்ளது.
E – சில சந்தர்ப்பங்களில் தனது நியாயாதிக்கத்தினை ஏனைய நீதிமன்றங்களுக்கு ஒப்படைக்க முடியும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 7 ஐப் பார்க்க

● **41 – 46** வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் நான்கு பிழையானவைகளாகும். **பிழையான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

**41.** இலங்கையில் அடிப்படை உரிமைகள் பாதுகாப்புப் பொறிமுறையில் இடம்பெறுபவை
A – உயர் நீதிமன்றமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும்
B – உயர் நீதிமன்றமும் ஒப்புட்சுமனும்
C – மனித உரிமைகள் ஆணைக்குழுவும் ஒப்புட்சுமனும்
D – உயர் நீதிமன்றமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் ஒம்புட்சுமனும்
E – உயர் நீதிமன்றமும் பாராளுமன்றின் பொது மனுக்கள் குழுவும் ஒப்புட்சுமனும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**42.** பாராளுமன்றச் சிறப்புரிமைகளானவை
A – கூட்டாகப் பாராளுமன்றினதும் தனிப்பட்ட வகையில் உறுப்பினர்களினதும் கௌரவத்தையும் அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் ஏற்பாடுகளாகும்.
B – பாராளுமன்றினது மட்டும் கௌரவத்தையும் அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் ஏற்பாடுகளாகும்.
C – சபாநாயகரின் கௌரவத்தையும் அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் ஏற்பாடுகளாகும்.
D – பாராளுமன்ற உத்தியோகத்தர்களின் அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் ஏற்பாடுகளாகும்.
E – பாராளுமன்ற உறுப்பினர்களின் கௌரவத்தையும் அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் ஏற்பாடுகளாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**43.** மாகாண சபைகளின் ஆளுநர்
A – மாகாண முதலமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்.
B – மாகாண முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்.
C – மாகாண சபையின் நிறைவேற்றுக் கிளையின் ஒரு பகுதியாவார்.
D – மாகாணத்தின் நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகித்தல் தொடர்பாகப் பாராளுமன்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.
E – மாகாணத்தின் நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகித்தல் தொடர்பாக மாகாண சபைக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**44.** 1978 அரசியலமைப்பின் படி மக்களின் சட்டவாக்கத் தத்துவம் பிரயோகிக்கப்படுவதாவது
A – ஜனாதிபதியினாலும் பாராளுமன்றினாலும்
B – பாராளுமன்றினாலும் மாகாண சபைகளாலும் உள்ளூராட்சி மன்றுகளினாலும்
C – பாராளுமன்றினால்
D – பாராளுமன்றினாலும் ஜனாதிபதியினாலும் உயர்நீதிமன்றினாலும்
E – மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றினாலும் மக்கள் தீர்ப்பின்போது நேரடியாக மக்களினாலும்
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**45.** இலங்கைக் கட்சி முறையின் முக்கியமான பண்புகளாவன
A – ஒரு பல கட்சி முறை
B – இரு பிரதான கட்சிகளின் ஆதிக்கத்தின் கீழான பல கட்சி முறை
C – இன, சமய, மொழிப் பிரச்சினைகளினடிப்படையிலமைந்த பல கட்சி முறை
D – பிரதான மூன்று கட்சிகளின் கீழ் குழுவமைந்த பல கட்சி முறை
E – காடர் கட்சிகளை மட்டும் கொண்ட பல கட்சி முறை
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**46.** இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள்
A – மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகிய மூன்று வகைகளைக் கொண்டதாகும்
B – தெரிவுசெய்யப்படுகின்றதும் நியமிக்கப்படுகின்றதுமான பிரதிநிதிகளைக் கொண்டவையாகும்.
C – மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரின் மேற்பார்வைக்குட்படுபவையாகும்.
D – தத்தமது பிரதேசங்களில் சட்டத்தையும் அமைதியையும் பேணும் பொறுப்பினைப் பெற்றனவாகும்.
E – மத்திய அரசாங்கத்தின் முகவர்களாகும்.
(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 8 ஐப் பார்க்க

● ஐக்கிய நாடுகள் தாபனம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கம் என்பவற்றின் மூலக் கொள்கைகள் தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி **47** ஆம் **48** ஆம் வினாக்களுக்கு விடைத் தருக.

A – தற்கால உலகிலுள்ள பரந்த நோக்கங்களைக் கொண்ட அரச சார்பு நிறுவனமாகும்.
B – வரையறுக்கப்பட்ட நோக்கங்களையுடைய பிராந்திய அரச சார்பு நிறுவனமாகும்.
C – சர்வதேச நிறுவனம் தொடர்பாக நடைபெற்ற சன்பிரான்சிஸ்கோ மாநாட்டில் பங்குபற்றிய 50 நாடுகளின் பிரதிநிதிகளின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்ட சாசனத்தின் அடிப்படையில் 1945 இல் தாபிக்கப்பட்டது.
D – சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்திப் பேணுதல் பிரதான நோக்கமாகும்.
E – டாக்கா பிரகடனத்தின் அடிப்படையில் 1985 டிசம்பர் 08 ஆம் திகதி தாபிக்கப்பட்டது.
F – உறுப்பரசுகளுக்கு மத்தியில் அரசியல், இராணுவப் பரப்புகளில் ஒத்துழைப்பினை விருத்தி செய்தல் பிரதான நோக்கமாகும்.
G – உறுப்பரசுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற மூலக்கொள்கையின் அடிப்படையில் செயற்படுகிறது.
H – இருதரப்பு மற்றும் நெருக்கடி விடயங்கள் கலந்துரையாடப்படக்கூடாது என்று உறுப்பரசுகள் பொதுவாக ஏற்றுள்ளன.
I – கம்யூனிச எதிர்ப்பு பிரதான பண்பாகும்.
J – உறுப்பினர்களுக்கிடையிலான உள்ளகப் பிரச்சினைகளினால் அதன் முன்னேற்றம் அதிகளவு பலவீனமடைந்துள்ளது.

**47.** ஐக்கிய நாடுகள் தாபனத்துக்குப் பொருந்தும் சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) ABCD (2) ACDG (3) AEFG (4) AHIJ (5) BDGH

**48.** பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கத்துக்குப் பொருந்தும் சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) ACFH (2) BEIJ (3) BEHJ (4) DEHI (5) GHIJ

● பொதுநலவாயம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைக் குழு ஆகியக தொடர்பான கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி **49** ஆம் **50** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A – வரையறுக்கப்பட்ட நோக்கங்களைக் கொண்ட ஒரு நடுத்தர அரச சார்பு நிறுவனம்.
B – வரையறுக்கப்பட்ட நோக்கங்களைக் கொண்ட ஓர் அரச சார்பற்ற நிறுவனம்.
C – ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உறுப்பினர்களுக்கு மட்டுமே உறுப்புரிமை பெறலாம்.
D – பிரித்தானிய மகா இராணியார் தலைமை தாங்குகின்றார்.
E – உறுப்பரசுகளின் சமூக-பொருளாதார, அரசியல் அபிவிருத்தியில் கவனம் செலுத்துகிறது.
F – பெரும்பாலும் முன்னாள் பிரித்தானியக் குடியேற்றங்களைக் கொண்டுள்ளது.
G – போர்க் களங்களில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் செயற்பாட்டில் பிரதானமாகக் கவனம் செலுத்துகின்றது.
H – உலகம் பூராவும் தாபிக்கப்பட்டுள்ள தேசிய செஞ்சிலுவைச் சங்கங்கள், செவ்விளம் பிறைச் சங்கங்கள் என்பவற்றினூடாகச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.
I – சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தில் பாதுகாவலனும் மேம்பாட்டாளரும் என்ற வகையில் உலகச் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
J – ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றது.

**49.** பொதுநலவாயத்துக்குப் பொருந்தும் சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) ACDH (2) BFHI (3) DEIJ (4) CEJI (5) ADEF

**50.** சர்வதேச செஞ்சிலுவைக் குழுவுக்குப் பொருந்தும் சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) AHIJ (2) ABEJ (3) DGHI (4) BGHI (5) GHIJ

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

16634

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண்: ....................................

| A பகுதி | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | 20 |

அறிவுறுத்தல்கள்:

* இவ்வினாப்பத்திரம் **A, B, C** என்ற மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.
* பகுதி **A** 20 குறு வினாக்களைக் கொண்டுள்ளது. பூரண ஒவ்வொரு விடைக்கும் **01** புள்ளியும் அரைகுறை விடைக்கு **1/2** புள்ளியும் வழங்கப்படும். சகல வினாக்களுக்குமான குறு விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி அதனைப் பகுதி **B**, பகுதி **C** விடைத்தாள்களுடன் இணைக்குக.
* பகுதி **B** யிலிருந்தும் பகுதி **C** யிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி A

1. "அரசு என்பது ஒரு சமூகத் தாபனமாகும்".
"அரசு என்பது ஒரு வர்க்கக் கருவியாகும்".
அரசு பற்றி மேற்குறிப்பிட்ட இரண்டு வரைவிலக்கணங்களையும் முன்வைத்த **இரண்டு** அரசியல் சிந்தனாவாதக் குழுவினரது பெயர்களைக் குறிப்பிடுக.

   1. ........................................
   2. ........................................

2. "சமூக ஒப்பந்தக் கோட்பாடு இரு சமூக முறைமைகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது". அந்த **இரண்டு** சமூக முறைமைகளையும் குறிப்பிடுக.

   1. ........................................
   2. ........................................

3. "அதிகாரம் மனிதர்களை மாசுபடுத்துகின்றது. அதிக அதிகாரமோ அதிகமாக மாசுபடுத்துகிறது".
"அதிகாரத்தைப் பெற்ற சகல மனிதரும் அவ்வதிகாரத்தின் மீது வரையறைகள் விதிக்கப்படும் வரை அதனை முறைகேடாகப் பிரயோகிப்பதற்கும் அதனைப் பேணுவதற்கும் முயல்வர் என்பதனைத் தொடர்ச்சியான அனுபவங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன".
அதிகாரம் பற்றிய மேற்குறிப்பிட்ட இரு கூற்றுகளையும் முன்வைத்த **இரு** அரசியல் தத்துவஞானிகளினதும் பெயர்களைக் குறிப்பிடுக.

   1. ........................................
   2. ........................................

4. "சிவில் அரசாங்கம் பற்றிய இரு ஒப்பந்தங்கள்" மற்றும் "தாஸ் கப்பிட்டால்" ஆகிய இரு நூல்களினதும் ஆசிரியர் **இருவரினதும்** பெயர்களைக் குறிப்பிடுக.

   1. ........................................
   2. ........................................

5. "அரச அதிகாரங்களின் பரவலாக்கம் மற்றும் அதிகாரங்களின் செறிவாக்கம் என்பவற்றின் அடிப்படையில் அரசாங்கங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன". அந்த **இரண்டு** வகைகளையும் குறிப்பிடுக.

   1. ........................................
   2. ........................................

6. * வலு வேறாக்கம்
   * பாராளுமன்ற இறைமை
   * அரசியல் சின்னங்கள்
   * அரசியலமைப்புப் புனராய்வு அதிகாரம்

   மேற்குறிப்பிட்ட நான்கில் அரசாங்க அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் **இரு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.

   1. ........................................
   2. ........................................

[பக். 2 ஐப் பார்க்க

7. "மந்திரிசபை அரசாங்க முறைமையில் நிறைவேற்றுத்துறை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது". அவ்விரு பகுதிகளையும் குறிப்பிடுக.

1. ............................................................

2. ............................................................

8. காங்கிரஸ் என்றழைக்கப்படும் ஐக்கிய அமெரிக்கச் சட்டத்துறை இரு மன்றுகளைக் கொண்டுள்ளது. அந்த **இரு** மன்றுகளினதும் பெயர்களைக் குறிப்பிடுக.

1. ............................................................

2. ............................................................

9. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பாதுகாப்புச் சபை இரு வகையான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அந்த **இரு** வகைகளையும் குறிப்பிட்டு, ஒவ்வொன்றுக்குமுரிய உறுப்பினர் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

1. ............................................................

2. ............................................................

10. "பொதுக் கொள்கைச் சுழற்சி ஆறு கட்டங்களைக் கொண்டுள்ளது". அவற்றுள் **இரு** கட்டங்களைக் குறிப்பிடுக.

1. ............................................................

2. ............................................................

11. "1796 முதல் 1833 வரை இலங்கையின் கரையோர மாவட்டங்கள் இரட்டை நிர்வாகத்தின் கீழ் நிலவின". இரட்டை நிர்வாகத்தின் **இரு** பகுதிகளையும் குறிப்பிடுக.

1. ............................................................

2. ............................................................

12. "1833 கோல்புரூக் சீர்திருத்தங்களின் அடிப்படையில் நிர்வாகத்தில் தேசாதிபதிக்கு உதவுவதற்காக இரு அரசாங்கத் தாபனங்கள் நிறுவப்பட்டன". அந்த **இரு** தாபனங்களையும் அவற்றின் அமைவுச் சேர்க்கையையும் குறிப்பிடுக.

1. ............................................................

2. ............................................................

13. டொனமூர் அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சபை இருவேறுபட்ட பணிகளை ஆற்றியது. அவ்விரு பணிகளையும் குறிப்பிடுக.

1. ............................................................

2. ............................................................

14. சோல்பரி அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறை இரு மன்றுகளைக் கொண்டிருந்தது. அந்த **இரு** மன்றுகளினதும் பெயர்களைக் குறிப்பிடுக.

1. ............................................................

2. ............................................................

15. அரசாங்க சேவையை நிர்வகிப்பதற்காக 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட **இரு** சபைகளைக் குறிப்பிடுக.

1. ............................................................

2. ............................................................

16. 1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்புக்கான 17 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவையினதும் 18 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றப் பேரவையினதும், உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

............................................................

............................................................

17. பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கத்தில் தீர்மானம் எடுப்பதில் ஈடுபடும் **இரு** உயர் தாபனங்களையும் குறிப்பிடுக.

1. ............................................................

2. ............................................................

[பக். 3 ஐப் பார்க்க

18. 1978 அரசியலமைப்பின் கீழ் அரசியலமைப்பினை விவரணம் செய்வதற்கும் தடுப்பாணை பிறப்பிப்பதற்குமான நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ள **இரு** நீதிமன்றங்களையும் குறிப்பிடுக.

1. ............................................................................................................................

2. ............................................................................................................................

19. இலங்கையில் மகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி மன்றுகளுக்கும் அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள **இரு** வழிமுறைகளையும் குறிப்பிடுக.

1. ............................................................................................................................

2. ............................................................................................................................

20. 1978 அரசியலமைப்பினைத் திருத்துவதற்கென அந்த அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **இரு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.

1. ............................................................................................................................

2. ............................................................................................................................

* *

e-தக்சலாவ The National e-learning Portal for The General Education

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

16634

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

**அறிவுறுத்தல்கள்:**

※ **B, C** பகுதிகளிலிருந்து **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி B

1. "அரசியல் விஞ்ஞானம் இயங்கு தன்மை பொருந்திய ஒரு பாடமாக இருப்பதோடு அதன் பாடப் பரப்பு நாளாந்தம் வளர்ச்சியடைகின்றது". நீர் உடன்படுவீரா ? உமது விடைக்குக் காரணங்கள் தருக. (20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** அவற்றின் நிறைகளுக்கும் குறைகளுக்கும் கவனம் செலுத்திப் பரிசீலனை செய்க.
   (i) எழுதப்பட்ட, எழுதப்படாத அரசியலமைப்புக்கள்
   (ii) வலு வேறாக்கம்
   (iii) விகிதசமப் பிரதிநிதித்துவம்
   (iv) நீதிப் புனராய்வு அதிகாரம்
   (v) ஜனாதிபதி மற்றும் மந்திரிசபை அரசாங்க முறை (10 x 2 = 20 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.
   (i) அரசாங்கம் என்பதிலிருந்து பொருள்படுவது யாது ? அதன் பணிகள் யாவை ?
   (ii) அரசாங்கத்தின் அதிகாரமும் அவ்வதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும் (10 x 2 = 20 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பரிசீலனை செய்க.
   (i) அமெரிக்க அரசாங்க முறையில் நிறைவேற்று - சட்டத்துறைத் தொடர்புகள்
   (ii) பிரான்சிய அரசாங்க முறையில் நிறைவேற்று - சட்டத்துறைத் தொடர்புகள்
   (iii) இந்திய அரசியலமைப்பிலுள்ள சமஷ்டி மூலக்கொள்கைகள்
   (iv) சுவிஸ்லாந்து அரசாங்க முறையில் கூட்டு நிறைவேற்றுத்துறை
   (v) பிரித்தானிய அரசியல் முறையில் முடியின் வகிபங்கு (10 x 2 = 20 புள்ளிகள்)

## பகுதி C

5. "1833 கோல்புரூக் - கமரன் சீர்திருத்தங்கள் இலங்கையில் பழைய யுகத்தின் முடிவினைக் குறித்து நின்றதோடு ஒரு புது யுகத்தை ஆரம்பித்து வைத்தது". நீர் உடன்படுவீரா ? உமது விடைக்குக் காரணங்கள் தருக. (20 புள்ளிகள்)

6. டொனமூர் அரசாங்க முறையோடு தொடர்புபடுத்திப் பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.
   (i) மந்திரிமார் சபையும் அரசாங்கத்தில் அதன் வகிபங்கும்
   (ii) நிறைவேற்றுக்குழு முறைமை (10 x 2 = 20 புள்ளிகள்)

7. சோல்பரி அரசாங்க முறையின் கீழ் பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.
   (i) நாம நிர்வாகி வகித்த நிலையும் அதிகாரங்களும்
   (ii) பாராளுமன்றின் அமைவுச் சேர்க்கையும் அதிகாரங்களும் (10 x 2 = 20 புள்ளிகள்)

8. 1978 அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியின் நிலையையும் அதிகாரங்களையும் பணிகளையும் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

※※※

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

තර්ක ශාස්ත්‍රය හා විද්‍යාත්මක ක්‍රමය I
அளவையியலும் விஞ்ஞானமுறையும் I
Logic and Scientific Method I

24 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- *எல்லா* வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
- விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
- 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள்.

**முக்கிய குறிப்பு:** இவ்வினாத்தாளில் பின்வரும் தர்க்க மாறிலிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
மறுப்பு : ~ , உட்கிடை : → , இணைவு : ∧ , உறழ்வு: ∨ , இரட்டை நிபந்தனை : ↔
நிறையளவாக்கக் குறியீடு : ⋀, குறையளவாக்க குறியீடு: ⋁

1. அவதானம் சோதனையிலிருந்து வேறுபடுவது என்பது
   (1) அது கருவிகளைப் பயன்படுத்துவதில்லை.
   (2) கருதுகோளுடன் தொடர்பு இல்லை.
   (3) புள்ளி விவர முடிவுகளைத் தருவதில்லை.
   (4) இது ஒரு கட்டுப்பாட்டுச் சோதனை அல்ல.
   (5) கோட்பாட்டுப் பொருள்களுடன் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை.

2. பின்வருவனவற்றுள் சமச்சீரற்ற தொடர்பைக் கொண்டுள்ள கூற்று எது ?
   (1) A இற்கு வடக்கில் B உள்ளது. (2) A, B யைக் காதலிக்கிறது. (3) A, B இற்கு சமம்.
   (4) A இன் சகோதரன் B ஆவான். (5) A, B இலிருந்து வேறுபட்டது.

3. போதிய நியாய விதிக்கு காட்டக்கூடிய உதாரணமாவது
   (1) ஒன்றில் அவன் சோறு உண்பான் அல்லது சோறு உண்ணமாட்டான்.
   (2) காகம் கரையாமலிருப்பதில்லை.
   (3) தீயில் கையை வைக்கும்போதெல்லாம் சுடும்.
   (4) A, B யாகவும் B அல்லாததாகவும் இருக்கமுடியாது.
   (5) A எப்போதும் A யாகவே இருக்க வேண்டும்.

4. வாய்ப்புப் பார்த்தல் அல்லது பொய்ப்பித்தலை விஞ்ஞானத்தின் முறையாகக் கொள்வதற்கு கார்ள் பொப்பரிற்கு இருந்த ஒரு காரணம்
   (1) வாய்ப்புப் பார்த்தலுக்கு அவதானம் தேவை.
   (2) அளவையியல் ரீதியில் வலிதான வாதத்தினை முறையியல் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.
   (3) விஞ்ஞான அறிவு பொய்யேயன்றி ஒரு போதும் அது உண்மையானதல்ல.
   (4) வாய்ப்புப் பாத்தலுக்குப் பல பரிசோதனைகள் தேவை.
   (5) தர்க்க ரீதியான உண்மைகள் விஞ்ஞான ரீதியிலானவை அல்லாதிருப்பதனால்.

5. அளவீட்டிற்காக உடல் வெப்பமானிக்கும் பாரமானிக்கும் பொதுவாகப் பயன்படுத்தும் பதார்த்தம்
   (1) காற்று (2) நீர் (3) பித்தளை (4) பாதரசம் (5) அமோனியா

6. அர்த்த ரீதியில் சமமில்லாத கூற்று எது ?
   (1) அன்னம் வெள்ளை.
   (2) ஒரு அன்னம் இருக்குமானால் அது வெள்ளை.
   (3) எல்லா அன்னங்களும் வெள்ளை.
   (4) ஒவ்வொரு அன்னங்களும் வெள்ளை.
   (5) அவதானத்திற்கு உள்ளான எல்லா அன்னங்களும் வெள்ளை.

(பக். 2 ஐப் பார்க்க

**7.** உய்த்தறி முறையியலில் விஞ்ஞானி செல்வது
(1) எதிர்வு கூறலிலிருந்து பொதுமையாக்கத்திற்கு. (2) அவதானத்திலிருந்து கோட்பாட்டிற்கு.
(3) அவதானத்திலிருந்து பரிசோதனைக்கு. (4) பொதுமையாக்கத்திலிருந்து எதிர்வு கூறலிற்கு.
(5) விதியிலிருந்து கோட்பாட்டிற்கு.

**8.** சாதாரண சூழலில் கொழும்பின் வளிமண்டல அமுக்கமானது
(1) நுவரெலியா அமுக்கத்திற்கு சமமானது. (2) நுவரெலியா அமுக்கத்தைவிட அதிகம்.
(3) நுவரெலியா அமுக்கத்தைவிடக் குறைவு (4) திருகோணமலையின் அமுக்கத்தோடு ஒப்பிடமுடியாது.
(5) வெப்பத்தின் பாதிப்பு இல்லாதது.

**9.** அர்த்தத்திற்குப் பாதகமற்ற வகையில் இரு பக்கங்களிலுமுள்ள அடைப்புக்குறிகளை அகற்ற முடியாத சூத்திரம் எது ?
(1) $(P \rightarrow Q)$ (2) $(\sim P \rightarrow Q)$ (3) $\sim (P \rightarrow Q)$ (4) $(\sim P \vee Q)$ (5) $(P \rightarrow (Q \rightarrow R))$

**10.** எடுப்பு முரண்பாட்டு சதுரத்தில் I எடுப்புப் பொய்யாயின் A, E மற்றும் O எடுப்புகளின் பெறுமானங்களாவன
(1) உண்மை, தீர்மானிக்க முடியாது, பொய்
(2) தீர்மானிக்க முடியாது, உண்மை, தீர்மானிக்க முடியாது
(3) தீர்மானிக்க முடியாது, பொய், உண்மை
(4) பொய், உண்மை, பொய்
(5) பொய், உண்மை, உண்மை

**11.** ஒரு விஞ்ஞான முறையின் அத்தியாவசிய பண்பானது
(1) கருவிகளைப் பயன்படுத்துதல் (2) பரந்த பொதுமையாக்கம் (3) கணிதத்தின் பயன்பாடு
(4) அனுபவச் சோதனை (5) புதியதான எதிர்வு கூறல்கள்

**12.** உறுதியான தரவு எனக் கூறப்படுவது
(1) 100% சரியான தரவு
(2) பொய்ப்பிக்க முடியாத தரவு
(3) கோட்பாட்டை நிலை நாட்டக் கூடிய தரவு
(4) கோட்பாட்டைப் பொய்ப்பிக்கும் தரவு
(5) மீண்டும் மீண்டும் செய்யப்படும் சோதனைகளுடன் ஒத்ததாய் இருப்பது

**13.** $\sim (P \wedge \sim Q)$ என்பதற்கு அளவையியல் ரீதியில் முரண்பாடானதாக இருப்பது
(1) $(P \rightarrow Q)$ (2) $(P \wedge Q)$ (3) $\sim (P \wedge Q)$ (4) $(P \vee Q)$ (5) $\sim (P \vee Q)$

**14.** எந்தக் காகமும் கறுப்பல்ல எனின் எல்லாக் காகங்களும் கறுப்பல்லாதவை என்பது
(1) முறையற்ற எதிர்வைக்கை (2) வலிதான எதிர்மாற்றம் (3) வலிதான மறுமாற்றம்
(4) முறையற்ற நேர்மாற்றம் (5) முறையற்ற மறுமாற்றம்

**15.** வெள்ளைத் தாயக்கட்டை இரண்டு எறியப்பட்டன. இரு ஆறுகளை (06) அல்லது மொத்தம் ஏழினைப் பெறுகின்றதன் நிகழ்தகவு
(1) $\frac{1}{6}$ (2) $\frac{5}{36}$ (3) $\frac{13}{108}$ (4) $\frac{7}{36}$ (5) $\frac{2}{9}$

**16.** நெப்டியூனைக் கண்டுபிடித்தது யார் ?
(1) கெப்ளரும் கலிலியோவும் (2) கொப்பனிக்கஸும் ரைக்கோவும் (3) ஐன்ஸ்டைன்
(4) அரிஸ்டோகஸ் (5) எடம்ஸும் லாவோசியரும்

**17.** இரு பெறுமான அளவையியலில் 7 மாறிகளுடனான வாதத்தின் உண்மை அட்டவணையில் பெறக்கூடிய எண்ணிக்கையானது
(1) 32 ஆகும். (2) 108 ஆகும். (3) 128 ஆகும். (4) 144 ஆகும். (5) 256 ஆகும்.


**18.** எழுவாயும் பயனிலையும் முறையே வியாப்தியாகவும் வியாப்தி அல்லாமலும் இருக்கும் வரிசை ஒழுங்கானது
(1) நிறை விதி எடுப்பு (2) நிறை மறை எடுப்பு (3) குறை மறை எடுப்பு
(4) குறை விதி எடுப்பு (5) தனி மறை எடுப்பு

**19.** ஒரு குடும்பத்திற்கு தேவையான அரிசியின் அளவு தேவையான சீனியின் அளவை விட ஐந்து மடங்காக இருப்பதோடு அக்குடும்பம் ஒரு கிலோ கிராம் சீனியை வாங்கும்போது மூன்று தேங்காய்கள் வாங்குவது அவசியமாகும். ஒரு கிலோ சீனி, ஒரு கிலோ அரிசி, ஒரு தேங்காயின் விலை முறையே 100, 75 மற்றும் 40 ஆக இருந்தால் அவர்கள் வாங்கும் பொருள்களின் நிறை இடைக்கான முழுத் தொகைக்கு கிட்டியதான நிகழ்தகவு என்ன ?
(1) 68 (2) 73 (3) 82 (4) 93 (5) 94

(பக். 3 ஐப் பார்க்க

**20.** கீழ்வரும் குறியீட்டாக்கத்திற்குப் பொருத்தமான, சரியான வென்வரைபடம் எது ?

$A\overline{B} = \phi, \ x \Sigma B$




(1) (2) (3) (4) (5)

**21.** நீள்வட்ட வடிவினாலான ஈர்ப்புப் பாதை எந்தக் கோளிலிருந்து முதலில் கண்டுபிடிக்கப்பட்டது ?

(1) புதன் (2) செவ்வாய் (3) சந்திரன் (4) வியாழன் (5) வெள்ளி

**22.** (β) யின் கீழ் A, B, C, D என்று காட்டப்படும் சூத்திரம் (α) கீழ் a, b, c, d என்று காட்டப்படும் கூற்றுகளுடன் பொருந்தக் கூடிய சரியான ஒழுங்கு என்ன ?

(α) (a) மாறிகள் இரண்டும் ஒரே உண்மைப் பெறுமானமாக இருக்கும்போது மட்டும் தான் உண்மை.
(b) மாறிகள் உண்மையாக இருக்கும்போது தான் உண்மை.
(c) இரண்டு மாறிகளும் உண்மையாக இருக்கும்போது தான் உண்மை.
(d) முன்னெடுப்பு பொய்யாயின் உண்மையாகும்.

(β) (A) $(P \rightarrow Q)$
(B) $(P \leftrightarrow Q)$
(C) $(P \vee Q)$
(D) $(P \wedge Q)$

(1) ABDE (2) BCAD (3) BADC (4) BCDA (5) BDCA

**23.** இவ்வாக்கியத்தில் உள்ள இடைவெளியை நிரப்பக்கூடிய மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
"DNA மரபணுவின் கட்டமைப்புக் கண்டுபிடிப்பானது முறையியல் ஆய்வில் ...................... வெற்றிகரமாகப் பயன்படுத்துவதற்கான சிறந்த உதாரணமாகும்."

(1) ஒப்புமை
(2) இரசாயனப் பரிசோதனை
(3) காட்டுருக்கள்
(4) புள்ளிவிவரவியல்
(5) துறைசார் நிபுணத்துவம்

**24.** புதிதான எதிர்வு கூறல்களைக் கண்டுபிடிப்பது நல்ல விஞ்ஞானக் கருதுகோளின் பண்பு என்று கார்ள் பொப்பர் கூறுகின்றார். பின்வருவனவற்றுள் புதிதான எதிர்வு கூறல் **அல்லாதது** எது ?

(1) வெள்ளி கிரகத்தில் நிழல்கள் இருப்பதாக சூரிய மையக் கோட்பாட்டின் அடிப்படையில் கொப்பனிக்கசினால் கூறப்பட்ட எதிர்வு கூறல்.
(2) ஒளிக் கதிர்கள் சூரியனுக்கு அருகில் செல்கையில் அவை சூரியனை நோக்கி வளைந்து செல்கிறது என்ற ஐன்ஸ்டைனின் எதிர்வு கூறல்.
(3) யுரேனஸ் கோளின் ஒடுபாதையிலிருந்து நெப்டியூன் கிரகம் தொடர்பில் புவியீர்ப்புக் கோட்பாட்டினடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வு கூறல்
(4) நியூற்றன் தனது புவியீர்ப்புக் கோட்பாட்டிலிருந்து உட்கிடையாக கோள்களின் நீள்வட்டப் பாதையைப் பெற்றுக் கொண்டமை
(5) மெக்ஸ்வெலின் சமன்பாட்டின் அடிப்படையில் ஃபிட்ஸ் ஜெரால்டின் ரேடியோ அலைகள் பற்றிய எதிர்வு கூறல்

**25.** பின்வரும் கூற்றுகளில் **சரியானது** எது ?

(1) நேர்ப் பெறுகையில் மட்டுமே துணைப் பெறுகை பயன்படுத்தப்படும்.
(2) நிபந்தனைப் பெறுகையில்தான் எடுகோள் முன்வைக்கப்படுகிறது.
(3) நேர்ப் பெறுகையில் மட்டும்தான் எடுகோள் பயன்படுத்தப்படுகிறது.
(4) முடிவு நிபந்தனை வாக்கியமாக இருக்கும்போது மட்டுமே நிபந்தனைப் பெறுகை பயன்படுத்தப்படுகிறது.
(5) துணைப் பெறுகையை நீங்கள் நிறைவு செய்வதுடன் பிரதான பெறுகை நிறைவு பெற்றுவிடும்.

**26.** அமைப்புப் போலியின் சரியான விளக்கமாவது

(1) முழுமையிலும் இருக்கும் பண்புகள் ஒவ்வொரு அலகிலும் இருப்பதாக முடிவு செய்தல்
(2) ஒவ்வொன்றிலும் இருக்கும் பண்புகள் முழுவதிலும் இருப்பதாக முடிவு செய்தல்
(3) ஒவ்வொரு அலகிலும் இருக்கும் பண்புகள் முழுவதிலும் இருப்பதாக முடிவு செய்தல்
(4) முழுவதிலும் இருக்கும் பண்புகள் அலகுகளுள் யாதாயினுமொன்றில் இருப்பதாக முடிவு செய்தல்
(5) அதிக அளவிலான அலகுகளில் காணப்படும் பண்புகள் முழுவதிலும் இருக்கும் என்று முடிவு செய்தல்

(பக். 4 ஐப் பார்க்க

Portal for The General Education

14731

**27.** இருதய வலி இருப்பதாகக் கூறிக்கொண்டு ஒரு நபர் விசேட வைத்திய நிபுணரிடம் சென்றார். வலி பற்றி நோயாளி கூறியவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த வைத்திய நிபுணர் நோயாளி கொண்டுவந்திருந்த, முன்னர் செய்யப்பட்ட வைத்திய பரிசோதனை, நோய் விவரங்கள் பற்றிய அறிக்கைகளைப் பார்வையிட்டு நோயாளிக்கு மருந்துகளை எழுதித் தந்து மேலதிக அவதானத்திற்காக தனது வைத்தியசாலையிலுள்ள நோயாளர் விடுதியில் அவரை அனுமதித்து மேலும் பல இரத்தப் பரிசோதனைகளைச் செய்யும்படி கூறினார். பின்வரும் கூற்றுகளில் எது வைத்திய நிபுணரின் செயற்பாட்டை மிகவும் சரியாக முன்வைக்கிறது ?

(1) அவர் நோயாளியின் கடந்த கால, தற்கால விடயங்களை அவதானம், பரிசோதனைகள் மூலம் தனி நிகழ் ஆய்வொன்றைச் செய்கின்றார்.
(2) அவர் அவதானம், பரிசோதனைகள் மூலமாக கடந்த கால, தற்கால மற்றும் எதிர்கால நிலைமைபற்றி ஒரு தனி நிகழ் ஆய்வொன்றைச் செய்கிறார்.
(3) அவர் நோயாளியின் கடந்த கால தற்கால மற்றும் எதிர்கால நிலைமைகளை அவதானம் மூலம் தனி நிகழ் ஆய்வொன்றைச் செய்கின்றார்.
(4) அவர் தனது அவதானத்தின் மூலமாக நோயாளியின் தற்போதைய நிலைமையை ஆராய்கின்றார்.
(5) அவர் நோயாளியின் தற்கால மற்றும் கடந்தகால நிலைமைகளை ஆராய்ந்து இறுதியாக நோய் அறிகுறிகளைக் கணித்து நோயாளிக்கு வைத்தியம் செய்கிறார்.

**28.** 1000 பேர்கள் அடங்கிய மக்கள் தொகையினரின் சமூக நிலைமையினை ஆராய்வதற்காக அவர்களில் 50 மாதிரிகளைத் தெரிவுசெய்து பேட்டி காண்பதற்கு ஒரு சமூக ஆய்வாளர் விரும்புகின்றார். நபர்களின் பெயர்கள் உள்ள அகர வரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்ட பெயர்ப் பட்டியல் அவரிடம் இருக்கின்றது. மாதிரிகளைத் தெரிவுசெய்வதற்கு கீழ்வரும் செயல்முறைகளில் எது சிறந்த முறை ?


(1) கிராமத்தின் கோயிற் தலைவரைச் சந்தித்து உரையாடி 50 பேர்களைத் தெரிவுசெய்வது.
(2) பெயர்ப் பட்டியலில் மொத்தமாக இருக்கும் ஆண் பெண் தொகையிலிருந்து விகிதாசாரப்படி ஆண் பெண் தொகையைத் தெரிவுசெய்தல்.
(3) பெயர்ப் பட்டியலில் வரிசை ஒழுங்குமுறையில் ஒவ்வொரு 20 வது நபரையும் தெரிவுசெய்தல்.
(4) கடைத் தெருவில் நின்று அங்கு வருவோரில் 50 பேரைத் தெரிவுசெய்தல்.
(5) ஆங்கில எழுத்துகளின் வரிசையிலிருந்து ஒவ்வொரு எழுத்தும் பெயரின் முதல் எழுத்தாக வரும் இருவரை எழுமாறாகத் தெரிவுசெய்து அதே விதத்தில் 50 பேர்களைத் தெரிவுசெய்தல்.

**29.** சோறு உண்டால் வயிறு நிறையும். சோறு உண்ணப்படவில்லை. ஆகவே வயிறு நிறையவில்லை. இந்த வாதத்தில் காணப்படும் போலி


(1) பின்னடை மறுப்புப் போலி
(2) இரட்டுறு மொழிதற் போலி
(3) வியாப்தியடையா மத்திய பதப் போலி
(4) முறையற்ற சிறுபதப் போலி
(5) முன்னடை மறுப்பு போலி

The National e-learning Portal for The General Education


**30.** $\sim(P \vee \sim Q)$ என்ற குறியீட்டுச் சூத்திரத்தை வெளிப்படுத்தும் தர்க்கப்படலை என்ன ?




(1)




(2)



(3)



(4)



(5)


**31.** சமூக விஞ்ஞானத்தில் நேரடியாகப் பயன்படுத்தாத நவீன தொழினுட்பம் எது ?

(1) DNA தொழினுட்பம்
(2) கணினித் தொழினுட்பம்
(3) தகவல் தொழினுட்பம்
(4) விண்வெளி ஆய்வுத் தொழினுட்பம்
(5) கதிரியக்கத் தொழினுட்பம்


**32.** இயற்கை விஞ்ஞானம் என்ற எண்ணக்கருவிற்கு எதிரானது

(1) பௌதிகவியல் என்ற எண்ணக்கரு
(2) உயிரியல் விஞ்ஞானம் என்ற எண்ணக்கரு
(3) தூய விஞ்ஞானம் என்ற எண்ணக்கரு
(4) சமூக விஞ்ஞானம் என்ற எண்ணக்கரு
(5) வானியல் என்ற எண்ணக்கரு


**33.** $[(P \to Q) \to P]$ என்பதற்கான உண்மை விருட்சம் எது ?




(1)




(2)



(3)



(4)



(5)

(பக். 5 ஐப் பார்க்க

14731

**34.** லவோசியரின் தகனம் பற்றிய பிராண வாயுக் கோட்பாட்டினைப் போன்று டோல்ட்டன் அணுக்கோட்பாடு பின்வருவன வற்றுள் எதில் கவனஞ்செலுத்தப்பட்டதால் பெறப்பட்டது ?
(1) அணுக்கள் (2) புலொஜிஸ்டன் (3) வெப்பம்
(4) நிறை (5) இரசாயனத் தொகுதி

**35.** பின்வருவனவற்றுள் $(\sim P \rightarrow Q)$ என்பதற்கு தர்க்க ரீதியில் சமமானது
(1) $(\sim P \vee \sim Q)$ (2) $(P \vee Q)$ (3) $(P \wedge Q)$ (4) $(P \leftrightarrow Q)$ (5) $(P \rightarrow \sim Q)$

**36.** தோமஸ் கூனின் கொள்கைப்படி
(1) கட்டளைப் படிம பொய்ப்பித்தல் (பொப்பேரியன் கருத்தில்) மற்றொரு கட்டளைப் படிமம் பொய்ப்பித்தலுக்கு இட்டுச் செல்லும்
(2) கட்டளைப் படிம மாற்றமானது விஞ்ஞானத்தை மேலும் மேலும் உண்மையை நோக்கிக் கொண்டு செல்கிறது.
(3) விஞ்ஞானப் புரட்சிகள் அரசியல் புரட்சிகளின் சில பண்புகளைப் பெற்றுள்ளன.
(4) முந்திய கட்டளைப் படிமத்தினை பிந்திய கட்டளைப் படிமமாக இனக் குறைப்புச் செய்யலாம்.
(5) X – கதிர் கண்டுபிடிப்பானது கட்டளைப் படிம மாற்றமல்ல.

**37.** கீழ்வரும் எந்தச் சோடிகளில் உண்மை விருட்சக் கிளையாக்க முறையைக் காணமுடியாதுள்ளது ?
(1) $(P \rightarrow Q), (P \vee Q)$ (2) $(P \wedge Q), (P \leftrightarrow Q)$ (3) $\sim (P \wedge Q), \sim (P \vee Q)$
(4) $\sim (P \rightarrow Q), \sim (P \vee Q)$ (5) $(P \leftrightarrow Q), \sim (P \leftrightarrow Q)$

**38.** கீழ்வருவனவற்றுள் **தவறான** விடை எது ? தொகுத்தறி அனுமானம் பயன்படுத்தப்படுவது.
(1) தொகுத்தறி முறையியலில் (2) சில உய்த்தறிமுறையியலில்
(3) பொபேரியன் முறையியலில் (4) நீதிமன்றத்தில் முடிவுகளை வழங்கும்போது
(5) கடந்த காலத்தில் எல்லாக் காலங்களிலும் சூரியன் உதித்திருப்பதனால் நாளைக் காலையும் சூரியன் உதிக்கும் என்ற முடிவினைப் பெறும்போது.

**39.** கீழ்வருவனவற்றுள் தர்க்கரீதியாகச் சரியான கூற்று எது ?
(1) எல்லாப் பிள்ளைகளும் தேர்வில் சித்தி பெறுவார்களாயின் தேர்வில் சித்தியைப் பெறும் எல்லோரும் பிள்ளைகளாவார்.
(2) சில பிள்ளைகள் தேர்வில் சித்தியடைவார்களாயின் எல்லாப் பிள்ளைகளும் தேர்வில் சித்தி பெறுவர்.
(3) பிள்ளைகள் மட்டும் தேர்வில் சித்திபெறுவார்களாயின் தேர்வில் சித்தி பெறுபவர்கள் மட்டும் பிள்ளைகளாவார்.
(4) எல்லாப் பிள்ளைகளும் தேர்வில் சித்தி பெறுவார்களாயின் எந்தப் பிள்ளைகளும் தேர்வில் தோல்வியடைய மாட்டார்கள்.
(5) சில பிள்ளைகள் தேர்வில் சித்தி பெற்றால் சில பிள்ளைகள் மட்டுமே தேர்வில் சித்தி பெறுவர்.

**40.** கீழ்வருவனவற்றுள் எது பயராபாண்ட்டின் நோக்குடன் இணங்கக் கூடியது ?
(1) விஞ்ஞான முறையியல் கட்டளையிடுவதாக இருக்கக்கூடாது.
(2) பின்னால் தொடரும் கோட்பாடுகள் ஒன்றுடனொன்று முரணானதாக இருக்கக் கூடாது.
(3) ஏனைய துறைகளிலிருந்து விஞ்ஞானத்தைப் பிரிப்பது முறையியலாகும்.
(4) தொலமிய முறைமையிலிருந்து கொர்ப்பணிக்கசு முறைமைக்கான இடமாற்றத்தின்போது மேலே, கீழே என்ற சொற்களுக்கான அர்த்தத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.
(5) உறுதியான விஞ்ஞான முறைகளைக் கையாள்வதில் கலிலியோ கவனமாகச் செயற்பட்டார்.

**41.** விசர் நாய்க் கடிக்கான தடுப்பு மருந்தை நிறுவிய இறுதிப் பரிசோதனையின்போது லூயி பாஸ்ட்டர் தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட இரு நாய்களினதும் தடுப்பு மருந்து ஏற்றப்படாத இரு நாய்களினதும் மண்டையோட்டிற்குள் விசர்நாய் நோய்க் கிருமிகளையும் செலுத்தினார். இங்கு பாஷ்ச்சர் கட்டுப்பாட்டு முறையைப் பயன்படுத்தியது
(1) அவர் கட்டுப்பாட்டுப் பரிசோதனையை செய்ததனால்.
(2) அவர் இந்தப் பரிசோதனையை நாய்களுக்கென மட்டுப்படுத்தியதால்.
(3) நோய்க் கிருமிகளைத் தடுப்பு மருந்தேற்றப்பட்ட, ஏற்றப்படாத நாய்களுக்கு உட்செலுத்தி முடிவினைப் பார்த்ததனால்.
(4) நாய்களின் மண்டையோட்டில் துளையிடும்போது அவற்றின் மூளைகள் சேதம் அடையாதவாறு பரிசோதனையினைக் கட்டுப்படுத்தி நிகழ்த்தியதனால்
(5) பல வருடங்களாக இவ்வாராய்ச்சியை மற்றும் இந்தத் தடுப்பூசியின் வளர்ச்சியைக் கட்டுப்பாட்டுடன் செய்து வந்ததனால்.

**42.** கீழ்வருவனவற்றுள் **எல்லா அன்னங்களும் வெள்ளை நிறம் அல்ல** என்பதனைச் சரியாகக் குறியீட்டில் தந்திருப்பது எது ?
(1) $\Lambda xFx \wedge Gx$ (2) $\mathrm{V}x\,(Fx \wedge Gx)$ (3) $\mathrm{V}x\,(Fx \wedge \sim Gx)$
(4) $\Lambda x\ (Fx \rightarrow \sim Gx)$ (5) $\sim \mathrm{V}x\ (Fx \wedge Gx)$

**43.** கீழ்வருவனவற்றுள் **"மலர்கள் மட்டுமே மணம் வீசுபவை"** என்பதனைச் சுட்டிக் காட்டும் சரியான குறியீட்டாக்கம் எது ?
(1) $AB \neq \phi$ (2) $A\overline{B} = 0$ (3) $A\overline{B} \neq \phi$ (4) $\overline{A}\,\overline{B} = \phi$ (5) $\overline{A}B = \phi$

(பக். 6 ஐப் பார்க்க

44. லக்கடோஸின் ஆய்வுத்திட்ட முறையியலுக்கு ஏற்ப கோள்கள் சூரியனை நீள்வட்ட ஒடுபாதையில் சுற்றிவருவதாக கெப்ளர் முன்வைப்பது
   (1) கொப்பனிக்க சூரிய மையவாதத்தின் கடின மையத்தை (Hard core) நிராகரித்தல்
   (2) கொப்பனிக்க சூரிய மையவாத ஆய்வுத் திட்டத்திலிருந்து வெளியேறுதல்
   (3) கொப்பனிக்க மையவாதத்தின் பாதுகாப்பு வளையத்தை (protective belt) திருத்தம் செய்தல்
   (4) கொப்பனிக்க சூரிய மையவாத ஆய்வுத் திட்டத்தினை மீறிச் செல்லுதல்
   (5) கொப்பனிக்க சூரியனை மையவாதத்திற்கு பதிலாக மற்றொரு ஆராய்சித் திட்டத்தை ஆரம்பித்தல்

45. கீழ்வருவனவற்றுள் வல்லுறழ்வு அர்த்தத்தை தரும் கூற்று எது ?
   (1) இரு உறழ்வு உண்மையாயிருத்தல்　　(2) ஏதேனுமொன்று உண்மையாயிருத்தல்
   (3) முதல் உறழ்வு மாத்திரம் உண்மையாயிருத்தல்　　(4) இரண்டாவது உறழ்வு மட்டும் உண்மையாயிருத்தல்
   (5) இரு உறழ்வுகளில் ஒரு உறழ்வு மட்டுமே உண்மையாயிருத்தல்

46. முக்கூற்று நியாயத் தொடையில் பெரும் பதப்போலி உருவாவதற்கு அதன் முடிவு
   (1) குறை எடுப்பாக இருக்க வேண்டும்.　　(2) பொது எடுப்பாக இருக்க வேண்டும்.
   (3) விதி எடுப்பாக இருக்க வேண்டும்.　　(4) மறை எடுப்பாக இருக்க வேண்டும்.
   (5) பகுப்பெடுப்பாக இருக்க வேண்டும்.

47. கீழே தரப்பட்டிருப்பது அண்மைக் காலத்தில் மிகச் சிறப்பாக விளங்கிய ஐந்து பௌதிகவியலாளர்கள். தற்காலப் பௌதிக விஞ்ஞானிகள் வகையீட்டின்படி அவர்களில் நால்வரை ஒரு வகையீட்டிற்குள்ளும் ஒருவரை மட்டும் வேறொரு வகையீட்டிற்குள்ளும் உட்படுத்த முடியும் அந்த ஒருவர் யார் ?
   (1) ஐன்ஸ்டைன்　　(2) நீல்ஸ்போர்　　(3) ரதபோர்ட்
   (4) ஹெய்சன்பேர்க்　　(5) பீ. ஏ. எம். டிரக்

48. (a) $\begin{array}{cc|c} M & P & E \\ S & M & A \\ \hline \therefore S & P & E \end{array}$　(b) $\begin{array}{cc|c} P & M & A \\ M & S & E \\ \hline \therefore S & P & O \end{array}$　(c) $\begin{array}{cc|c} P & M & A \\ M & S & A \\ \hline \therefore S & P & I \end{array}$　(d) $\begin{array}{cc|c} M & P & I \\ M & S & I \\ \hline \therefore S & P & I \end{array}$　(e) $\begin{array}{cc|c} M & P & O \\ S & M & E \\ \hline \therefore S & P & O \end{array}$

   மேற்படி வடிவங்களில் வாய்ப்பற்ற வடிவமாக அமைவது
   (1) (a) உம் (d) உம்　　(2) (b) உம் (c) உம்　　(3) (d) உம் (e) உம்
   (4) (c) உம் (e) உம்　　(5) (c) உம் (d) உம்

49. கீழ்வரும் விஞ்ஞானிகளில் பரிணாமவாத கோட்பாட்டுடன் நேரடியாகத் தொடர்பில்லாதவர் யார் ?
   (1) சார்ள்ஸ் டார்வின்　　(2) எஸ்மஸ் டார்வின்　　(3) லாமார்க்
   (4) தோமஸ் ஹக்ஸ்லி　　(5) லீனியஸ்

50. உள்பொருள் தனியனாக்கத்தில் புதிய மாறி பயன்படுத்தப்பட வேண்டுமாயின் $Vx(Fy \wedge Hx)$ என்பதற்கு பின்வருவனவற்றுள் எதனைப் பொருத்தமானமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
   (1) $(FA \wedge Hx)$　　(2) $(Fy \wedge HB)$　　(3) $(Fx \wedge Hy)$　　(4) $(Fy \wedge Ha)$　　(5) $(FA \wedge HA)$

❊ ❊ ❊

The National e-learning Portal for The General Education

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

5952



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

තර්ක ශාස්ත්‍රය හා විද්‍යාත්මක ක්‍රමය II
அளவையியலும் விஞ்ஞானமுறையும் II
**Logic and Scientific Method II**

24 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

**அறிவுறுத்தல்கள்:**

பகுதி I, பகுதி II ஆகியவற்றிலிருந்து **நான்கு** வினாக்கள் வீதம் தெரிவு செய்து எல்லாமாக **எட்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

முக்கிய குறிப்பு :

* இவ்வினாத்தாளில் பயன்படுத்தப்படும் தருக்க மாறிலிகள் பின்வருமாறு :
**மறுப்பு : ~ , உட்கிடை : →, இணைப்பு : ∧, உறழ்வு: ∨, இரட்டை நிபந்தனை : ↔,**
**நிறையளவாக்க குறியீடு : ⋀, குறையளவாக்க குறியீடு: ⋁**
* பரீட்சார்த்திகள் இவற்றைத் தவிர பிற மாறிலிகளைப் **பயன்படுத்தலாகாது.**
* தேற்றங்களை நிறுவ வேண்டியிருக்கும் சந்தர்ப்பங்கள் தவிர்த்துப் பெறுகை முறையில் தேற்றங்களை (உ – ம் டிமோர்கன்) **பயன்படுத்தலாகாது.**

## பகுதி I

1. (அ) விஞ்ஞான விதியொன்றினைக் கண்டுபிடிப்பதற்கு முன் அனுபவ அவதானங்கள் அவசியமானதா ? கலிலியோவின் எறியப்படும் பொருளொன்றின் இயக்கம் மற்றும் சுதந்திரமாக நிலத்தை நோக்கி விழும் பொருள் பற்றிய விதிகளின் கண்டுபிடிப்பின் பிண்ணணியில் ஆராய்க. (04 புள்ளிகள்)

(ஆ) விஞ்ஞானப் பொதுமையாக்கத்தினைச் சோதனை செய்வதற்கு அனுபவப் புலக்காட்சி அவசியமானதா ? விஞ்ஞானத்திற்கும் விஞ்ஞானம் அல்லாததற்கும் இடையில் முன்வைக்கப்பட்டுள்ள பொப்பரின் வேறுபாட்டுத் தத்துவக் கோட்பாட்டின் பின்னணியில் ஆராய்க. (03 புள்ளிகள்)

(இ) விஞ்ஞானக் கருதுகோளினை வாய்ப்புப் பார்த்தலுக்கும் பொய்ப்பித்தலுக்கும் இடையில் தர்க்கச் சமச்சீரின்மை காணப்படுகின்றது எனக் கூறப்படுவது ஏன் என்பதனை விளக்குக. (03 புள்ளிகள்)

2. (அ) ஒவ்வொரு உதாரணம் தந்து கீழ்வரும் போலிகளை விளக்குக.
   (i) பரிவு நியாயம்
   (ii) முடிவு மேற்கொளல் போலி (04 புள்ளிகள்)

(ஆ) கீழ்வருவனவற்றுள் இடம்பெற்றுள்ள போலிகளை இனங்கண்டு அந்தந்தப் போலிகள் நிகழ்ந்துள்ள விதத்தினை விளக்குக.
   (i) இலங்கையர் விருந்தோம்பலுக்கு விருப்பமுள்ளவர்கள். ஆகவே $X$ என்பவரும் விருந்தோம்பலுக்கு விருப்பமுள்ளவர்.
   (ii) மழையுடன் பெரும் இடியோசை கேட்டது. ஆகவே இடியோசைக்கு காரணம் மழை தான் என்று முடிவு செய்யலாம். ($03 \times 2 = 06$ புள்ளிகள்)

3. (அ) தரப்பட்டுள்ள சுருக்கத்திட்டத்தினைப் பயன்படுத்திக் கீழ்வரும் குறியீட்டு வாக்கியங்களைத் தமிழிற்கு மொழி பெயர்க்குக.
   P : இலங்கை போட்டியில் வெற்றிபெறும்
   Q : இந்தியா போட்டியில் வெற்றிபெறும்
   R : இங்கிலாந்து போட்டியில் வெற்றிபெறும்
   S : அவுஸ்திரேலியா போட்டியில் வெற்றிபெறும்

   $\sim((\sim P \wedge \sim Q) \rightarrow (R \vee S))$ ($2\frac{1}{2}$ புள்ளிகள்)

(ஆ) உமது குறியீட்டுத் திட்டத்தை தெளிவாகக் காட்டி கீழ்வரும் வாக்கியங்களை குறியீட்டு மொழியாக மாற்றவும் ($2\frac{1}{2}$ புள்ளிகள்)
   போட்டியில் வெற்றி பெறுவது இலங்கையே அன்றி இந்தியா அல்ல

(இ) கீழ்வரும் தேற்றத்தை பெறுகை முறை மூலம் நிறுவுக.
   $(P \vee Q) \leftrightarrow \sim(\sim P \wedge \sim Q)$ (05 புள்ளிகள்)

4. (அ) நிகழ்தகவின் பாரம்பரிய அர்த்த விளக்கத்தினை கூறி, அதனை நுணுகிப் பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)

(ஆ) ஒரு விளையாட்டின்போது ஒரு விளையாட்டாளர் ஸ்கோப்பன் தாளினை அல்லது ஆடத்தன் தாளினை கூட்டத்திலிருந்து வெளியே எடுத்தால் அவனுக்கு நான்கு புள்ளிகள் கிடைப்பதுடன் அவன் டயமன் தாளினை வெளியே எடுத்தால் இரண்டு புள்ளிகள் கிடைக்கும். கிளாவரை தாளினை வெளியே எடுத்தால் அவனுக்கு மூன்று புள்ளிகள் குறையும். ஒரு தாளை வெளியே எடுக்கும்போது எதிர்பார்க்கக்கூடிய புள்ளி என்ன ? (06 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க


5. (அ) கீழ்வரும் குறியீட்டு வாக்கியத்தை வெளிப்படுத்தக்கூடிய தர்க்கப் படலையை அமைக்குக.


(i) $(P \leftrightarrow Q)$

(ii) $((\sim P \vee \sim Q) \wedge (\sim P \wedge \sim Q))$

($02\frac{1}{2} \times 2 = 05$ புள்ளிகள்)

(ஆ) கீழ்வரும் வலையமைப்பு ஒவ்வொன்றையும் குறியீட்டு வடிவத்தில் காட்டுக.




($02\frac{1}{2} \times 2 = 05$ புள்ளிகள்)

## பகுதி II

6. உமது குறியீட்டுத் திட்டத்தைத் தந்து கீழ்வரும் வாதங்களை குறியீடாக்கம் செய்வதுடன் அவை வலிதானவையா வலிதற்றவையா என்பதை உண்மை விருட்ச முறை மூலம் துணிக. வாதம் வலிதானதாக இருக்குமாயின் அதனைப் பெறுகை முறை மூலம் நிறுவுக.

(அ) குண்டுவெடித்து பேரோசை கேட்டிருக்குமாயின் ஏராளமான உயிர்கள் அழிந்து போயிருக்கும். ஆகவே ஏராளமான உயிர்கள் அழியாமலிருந்தால் ஒன்றில் குண்டு வெடிக்கவில்லை அல்லது பேரோசை கேட்கவில்லை.

(ஆ) இலங்கையில் சமாதானம் இருந்தால்தான் உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள். இலங்கையின் பொருளாதாரம் நன்றாக இருந்தால் உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள். உண்மையாகவே இலங்கையில் சமாதானம் உள்ளது. ஆகவே உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருவதோடு இலங்கையின் பொருளாதாரம் நன்றாகவிருக்கும். (15 புள்ளிகள்)

7. (அ) மாதிரிக் கோட்பாட்டில் உள்ள கீழ்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.

(i) குடிசனத் தொகை

(ii) மாதிரி

(iii) எழுமாற்று மாதிரி

(iv) அடுக்கமைவு மாதிரி (08 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் பொதுத் தேர்தல் முடிவுறும் இறுதிக் கட்டத்தின்போது கொழும்பைச் சேர்ந்த பத்திரிகை நிரூபர் ஒருவர் தேர்தல் முடிவு பற்றி எதிர்வு கூறலை முன்வைப்பதற்காக கொழும்பைச் சேர்ந்த கீழ்வரும் ஒவ்வொரு பிரதேசங்களிலிருந்தும் எழுமாற்று மாதிரியாக 100 நபர்களை தெரிவு செய்து நேர்முகங் கண்டார்.

வண்ணாத்தமுல்லை (ஏழைமக்கள் அதிகம் வாழும் பிரதேசம்)

கறுவாக்காடு (செல்வந்தர்கள் அதிகம் வாழும் பிரதேசம்)

வெள்ளவத்தை (தமிழ் மக்கள் அதிகம் வாழும் பிரதேசம்)

மருதானை - பஞ்சிகாவத்தை (முஸ்லிம்கள் அதிகம் வாழும் பிரதேசம்)

குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள மாதிரியின் தகுதித் தன்மையை ஆராய்க. இந்த வகை மாதிரியில் பாரியளவினதான குறைபாடுகள் உள்ளனவா ? (07 புள்ளிகள்)

8. தோமஸ் கூனின் கட்டளைப் படிமம் (paradigm), சாதாரண விஞ்ஞானம் (normal science) மற்றும் விஞ்ஞானப் புரட்சி (scientific revolution) ஆகிய எண்ணக்கருக்களின் பண்புகளை உதாரணங்கள் தந்து விளக்குக. (15 புள்ளிகள்)

9. (அ) உமது குறியீட்டுத் திட்டத்தைத் தந்து கீழ்வரும் வாக்கியங்களைப் பயனிலை தருக்க வடிவத்தில் குறியீட்டில் அமைக்குக.

(i) எந்த ஆணும் இராணி அல்ல

(ii) கிளியோபெட்ரா இராணியாவாள்

(iii) எல்லா அழகு இராணிகளும் இராணிகள் அல்ல

(iv) கிளியோபெட்ரா சீசரினதும் அண்டனியினதும் மனைவி (06 புள்ளிகள்)

(ஆ) உமது சுருக்கத் திட்டத்தைத் தந்து கீழ்வரும் வாதத்தினை குறியீட்டாக்கம் செய்து அதனை வலிதானது எனப் பெறுகை முறை மூலம் காட்டுக.

எல்லா நடிகர்களும் தமது இரு கால்களில் நிற்கின்றனர். ஒன்றில் மனிதர்களும் பறவைகளுமே இரு கால்களில் நிற்பவை. நடிகர்கள் பறவைகள் அல்ல. ஆகவே நடிகர்கள் இருந்தால் மனிதர்களும் இருப்பர். (09 புள்ளிகள்)

10. கீழ்வருவனவற்றுள் **மூன்றிற்கு** குறிப்பு எழுதுக.

(அ) பிரான்சிஸ் பேக்கன் முன்வைத்ததன் படி தொகுத்தறி முறை

(ஆ) ஊகிப்புக்கள் (conjectures) மற்றும் நிராகரிப்புக்கள் (refutations) என்பவற்றினால் உருவான பொப்பரின் முறையியலின் பண்பு

(இ) பாரம்பரிய பௌதிகவியலினை "இழக்கச்" செய்தல்

(ஈ) பூமியில் மனிதர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளதா ?

(உ) எமது யுகம் விஞ்ஞான தொழினுட்ப யுகம்

(ஊ) டார்வினின் பரிணாமவாதம் (15 புள்ளிகள்)

* * *